

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அமைப்பாளர் சு.ஜனார்த்தனன் தலைமையில் பரணிபுத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா, இளம் பேச்சாளர் கீர்த்தனா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம்,குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி, ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அ.தி.மு.க.வினரின் பொய்ப் பிரச்சார ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து

# திருப்போரூரில் பதில் விளக்க பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் – தமிழன் பிரசன்னா விளக்க உரை!

காஞ்சிபுரம், ஜூலை12-

அ.தி.மு.க.வினர் திருப்போரூரில் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட பதில் விளக்க பொதுக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - தமிழன் பிரசன்னா விளக்க உரை ஆற்றினார்கள்.

திருப்போரூரில் அ.தி.மு.க.வினர் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து பதில் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் திருப்போரூர் அம்பேத்கர் சிலை ரவுண்டானா அருகில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர் - ஒன்றிய குழுத்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது.

திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் மு.சேகர், திருப்போரூர் செயலாளர் - பேரூராட்சி மன்றத் தலைவர் மு.தேவராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள்.

திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய செயலாளர் வி.தமிழ்மணி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், திருக்கழுக்குன்றம் பேரூர் செயலாளர் டி.யுவராஜ், திருக்கழுக்குன்றம் ஒன்றிய குழுத்தலைவர் ஆர்.டி. அரசு, தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி. அன்புசெழியன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் காயத்திரி அன்புச்செழியன், ஊராட்சி ஒன்றியக் குழு துணைத்தலைவர் சத்திய சேகர், எஸ்.ஏ. பச்சையப்பன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.அஸ்கர்அலி, வி.சந்திரன். பேரூராட்சி துணைத்தலைவர்கள் ஆர்.பரசுராமன். வீ.அருள்மணி,

திருப்போரூர் பேரூர் நிர்வாகிகள் ஜி.பலராமன், எஸ்.ஏழுமலை, ஜி.வாணி, டி.கே.பாலசுப்பிரமணியன், டி.மோகன், டி.டி.சேகர், ஏ.கமலகண்ணன், வி.வீரபத்திரன், ஏ.குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் சிறப்பு பேச்சாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு அ.தி.மு.க.வினர் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து பதில் விளக்க உரை ஆற்றினார்கள்.

காஞ்சிபுரம் நடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்,எஸ். செந்தில்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.செல்வக்குமார், கழக பொறியாளர் அணி துணை செயலாளர் பிரதீப், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பார் வீ.விஜயகுமார், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பார் ச.சசிகலா, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பார் ஆர்.கோவிந்தன், கழக அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.ஜெகதீப், எம்.சி.ராகவன், க.ரவிக்குமார், தே,செங்குட்டுவன், ஆர்.யாதவன், ஏ.முனுசாமி, சி,பஞ்சாமிர்தம், டி.வெங்கடேசன், பி.சிவமணி, சி.கோபிநாத், பர்வின் நிஷா, ஆர்.பவித்ரா, செ,எல்லப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

முடிவில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் க.கவுரிசங்கர் நன்றி உரை ஆற்றினார்.

## குரூப் 4 தேர்வு

### டி.என்.பி.எஸ்.சி. அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 12

டிஎன்பிஎஸ்சி தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண் 07/2025 நாள் 25.04 2025இன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுIV (தொகுதி IV)இல் அடங்கிய பதவிகளுக்கான கொள்குறிவகை (OMR) தேர்வு நாளை முற்பகல் நடைபெற உள்ளது.

இத்தேர்வினை 13,89,738 விண்ணப்பதாரர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 4,922 தேர்வுக் கூடங்களில் எழுதவுள்ளனர்.

இத்தேர்வுக்காக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமை ஒருங்கிணைப்பாளராகவும் மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுவார்கள். தேர்வினை கண்காணிக்கும் பொருட்டு துணை ஆட்சியர் நிலையில் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு தேர்வுக் கூடத்திற்கும் ஆய்வு அலுவலர் ஒருவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்வு தொடர்பான மந்தணப் பொருட்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி அரசு கருவூலங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 4.922 தேர்வுக் கூடங்களுக்கு முதன்மை கண்காணிப்பாளர்கள் மற்றும் அறை கண்காணிப்பாளர்கள் (20 தேர்வர்களுக்கு ஒருவர்) நியமிக்கப்பட்டுள்ளனர்.



திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியம் அல்லிக்குழி ஊராட்சியில் பகுதி நேர ஆரம்ப சுகாதார நிலையம், அங்கன்வாடி மையம், சமையலறை கட்டடங்களை தலைமை செயற்குழு உறுப்பினரும் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். இந் நிகழ்ச்சிகளில் வட்டார மருத்துவ அலுவலர் மரு. இராமச்சந்திரன் பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், ஒன்றிய நிர்வாகிகள் இலட்சுமணன், தேவேந்திரன், அல்லிக்குழி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சத்ய நாராயணன், ராஜாசிங் கிளை செயலாளர்கள் ஆறுமுகம், சேகர், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.07.2025) சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்தில், "உலக மக்கள் தொகை தினம் 2025" விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்று, பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, இளம் பருவத்தினருக்கான விழிப்புணர்வு நல கையேடு மற்றும் குடும்பநல விளக்க கையேடு வெளியிட்டு விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார்,, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், குடும்ப நல இயக்குநர் மரு.சித்ரா, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணி ராஜன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சோமசுந்தரம், துணை இயக்குநர் திரு.சங்கரேஸ்வரன் மற்றும் உயரலுவலர்கள், செவிலிய மாணவிகள் கலந்து கொண்டனர்.

# அறிவைத்தேடி தமிழ்ச் சமூகத்தை பயணிக்கச் செய்தவர் கலைஞர்!

## கலைஞர் நூலக வாசகர் சந்திப்பில் இளம் பேச்சாளர் நா.நரேன் பேச்சு!





சென்னை,ஜூலை 12

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 10.07.2025 அன்று 110 வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் நா. நரேன் கௌதம் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது திட்டத்தினால் தமிழ்நாட்டை எவ்வாறு மாற்றியுள்ளார் என்பதை எடுத்துக்கூறினார். மேலும், “மாற்றுக் கட்சியினர் தலைவர்களின் பிறந்தநாளை மிக விமர்சையாகக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில், கோட்டூர்புரத்தில் அண்ணாவின் நூற்றாண்டில் உலகப் புகழ்மிக்க நூலகத்தை திறந்து இத்தமிழ்ச் சமூகத்தை அறிவைத் தேடி பயணிக்கும் பணியைச் செய்தவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்” என்றும் கூறினார். நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான திராவிட மாடல் அரசு புத்தகம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஜே.எம். எச்.இம்ரான், என்.மோகன் வேல், பகுதி அமைப்பாளர் வ.வேல்குமார் பகுதி துணை அமைப்பாளர்கள் முரசொலி ஸ்ரீதர், ஆர்.ராஜேஷ்(எ) காந்தி, வெ.சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

